

தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம், அயன்கரிசல்குளம் ஊராட்சியில் ரூ.47.60 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் மும்மூர்த்தி, செல்வராஜ், ராதா கிருஷ்ணன், இம்மானுவேல், வட்டார வளர்ச்சி அலுவலர் தினகரன், உதவி பொறியாளர் ரவிச்சந்திரன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அழகுராஜ், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அமெரிக்காவின் வரிவிதிப்பால் தத்தளிக்கும்

## சிறு - குறு ஜவுளி ஏற்றுமதியாளர்களை மீட்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?

### மக்களவையில் — டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 6-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 02 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பால் தத்தளிக்கும் சிறு குறு ஜவுளி ஏற்றுமதியாளர்களின் துயர் துடைக்க ஒன்றிய அரசு ஏதேனும், நடவடிக்கைகளை எடுக்கும் எண்ணம் உள்ளதா? என்றும், திருப்பூர், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்ட ஏற்றுமதியாளர்களின் இன்னல்களை போக்கிடும் வகையில், ஒன்றிய அரசு முன்முயற்சிகள் எடுத்துள்ளதா? என்றும், ஆடை ஏற்றுமதியாளர்களின் வீழ்ச்சியை மீட்க ஏதேனும் செய்ய இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் ஜவளித் துறை இணையமைச்சர் பபித்ரா மெர்கரிட்டா அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் ஜவுளித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு :

கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2025 வரையிலான ஆறு மாத காலத்தையும், அதற்கு முந்தைய ஆண்டினுடன் ஒப்பிடும் போது சிறு குறு ஜவளி ஏற்றுமதியாளர்களின் அமெரிக்க ஏற்றுமதி $5362 லிருந்து $5224 மில்லியன் டாலர்களாக உள்ளது என்றும், மற்ற நாடுகளுக்கான ஏற்றுமதி $12859லிருந்து $13011 மில்லியன் டாலர்களாகவே இருப்பதால், பெரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது என்று கூற இயலாது என்றும், தமிழக சிறு குறு ஜவளி மற்றும் ஆடை ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதி $3975லிருந்து $4078 மில்லியன் டாலர்களாகவே உள்ளது என்றும், திருப்பூர், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள சிறு குறு ஜவளி மற்றும் ஆடை ஏற்றமதியாளர்களிடம் பெரிய வீழ்ச்சி எதுவும் இல்லை என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பை குறித்து ஏற்றுமதியாளர்களிடம் இதுவரை இரண்டு கலந்தாய்வுக் கூட்டங்களை ஒன்றிய அரசு நடத்தியுள்ளது என்றும், மேலும் கீழ் கண்ட பல்வேறு திட்டங்களை ஒன்றிய அரசு நிறைவேற்றி வருகிறது என்று கூறினார்.

பிரதம மந்திரி மித்ரா திட்டத்தின்கீழ் உலகத் தரத்திலான ஜவளி



கட்டமைப்புகளுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்றும், சமர்த் திட்டத்தின் படி, திறன் வளர்ப்பு பயிற்களும், வேலை வாய்ப்புகளும் ஜவளித் துறையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்றும், தேசிய கைத்தறி துறையில் உள்ளவர்களுக்கு நிதியுதவியும், தேசிய கைவினை பொருட்கள் மேம்பாடு திட்டத்தின் படி கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் ஒன்றிய அரசு ஆவன செய்து வருகின்றது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், பாரா சூட் உற்பத்தியாளர்கள், சிறப்பு ஆடை அமைப்பாளர்கள் ஆகியோருக்கான சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், திருப்பூரிலுள்ள ஜவளி ஏற்றுமதியாளர்களுக்கென பருத்திக்கான இறக்குமதி வரிகளில் சலுகைகள் வழங்கபடுகின்றன என்றும் சேவை மற்றும் சரக்கு வரிகளில் தேவையான சீர்திருத்தங்கள், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்க வழங்கப்படுகின்றன என்றும், வரித்தள்ளுபடிகளின் மூலம் 15000 அதிகமான ஏற்றுபமதியாளர்கள் பயனைந்துள்ளனர் என்றும்,

இந்திய அரசு, ஜவுளித்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 15 நாடுகள், தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை மேற் கொண்டுள்ளது என்றும், 40 நாடுகளிலுள்ள இந்திய தூதரகங்கள் மூலமாக நீடித்த ஏற்றுமதி வளர்ச்சியை உறுதிப்படுத்த தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றும், ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 20,000 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது என்றும்,இதனால் தமிழகத்தின் சிறு குறு ஜவுளி ஏற்றுமதியாளர்கள் பெருமளவில் பயனடைந்துள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் ஜவுளித் துறை இணையமைச்சர் பபித்ரா மெர்கரிட்டா பதிலை அளித்துள்ளார்.

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் — தங்கம் தென்னரசு பங்கேற்பு!

## விருதுநகர் மாவட்டம் சிவகாசி மேயர் சங்கீதா இன்பம் இல்ல திருமண விழா !

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து வாழ்த்தினார்!

விருதுநகர், டிச.6-

விருதுநகர் மாவட்டம் சிவகாசி மேயர் சங்கீதா இன்பம் இல்ல திருமணத்திற்கு வருகை தந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் விருதுநகர் மாவட்ட எல்லை சத்திரரெட்டியா பட்டி மதுரை ரோட்டில் மாபெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ ஆர் ஆர் சீனிவாசன், ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்க பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் திருச்சுழி பொண்ணு தம்பி, காரியாபட்டி ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், செல்வம், நரிக்குடி கண்ணன், ரமேஷ், அருப்புக்கோட்டை ஒன்றிய செயலாளர் பாலகணேசன், பொன்ராஜ், சாத்தூர் ஒன்றிய செயலாளர் கடற்கரைராஜ், முருகேசன், விருதுநகர் ஒன்றிய செயலாளர்கள் ஆவுடையம்மாள், சிவகாசி ஒன்றிய செயலாளர்கள் விவேகன்ராஜ், தங்கராஜ், ஸ்ரீவில்லிபுத்தூர் முனியாண்டி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.வி.கே.துரை, தலைமை செயற்குழு உறுப்பினர் சுப்பா ராஜா, எம். ஏ சந்திரன், சிவகாசி மாநகரச் செயலாளர் எஸ் எ உதயசூரியன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வனராஜா,

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி வேட்பாளர்கள் கே கே எஸ் எஸ் ஆர் ரமேஷ், கே ஜி ராஜகுரு, நகரச் செயலாளர்கள் விருதுநகர் எஸ் ஆர் எஸ் தனபாலன், காரியாபட்டி நகர் ஆர் கே செந்தில், அருப்புக்கோட்டை ஏ கே மணி, சாத்தூர் குருசாமி, சிவகாசி காளிராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி பி ராஜன், அருப்புக்கோட்டை முன்னாள் சேர்மன் சிவபிரகாசம், துணை அமைப்பாளர் நகர தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நேஷனல் ராமர், அரசு போக்குவரத்து கழக தொமுச பொதுச் செயலாளர் ராஜ செல்வம், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி எல் திருமாறன், பொதுக் குழு உறுப்பினர்கள் ஆர் பி மதியழகன், எஸ் சுதாகர், தெற்கு மாவட்ட திமுக பொருளாளர் செட்டி குறிச்சி பிரபாகரன், இளைஞர் அணி அமைப்பாளர் ஆர் கிருஷ்ணகுமார், பாபுஜி, வடக்கு மாவட்ட பொருளாளர் வேலுச்சாமி மற்றும் ஏராளமான பொது மக்களும், கழக தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரா (எ) வி.வீரமணி

### டிசம்பர் 6 (2020)



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# நீ சமூகநீதியின் அரண்!
# சனாதனத்தின் முரண்!



உதயநிதி
இது பெயர் அல்ல!
ஒரு சகாப்தம்!
ஒரு இயக்கம்!

நீ
நீதிக்கட்சியின் நீட்சி!
சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளி!
தி.மு.கழகத்தின் வைப்புநிதி!
இளைய சமுதாயத்தின் எழுச்சி நிதி!

நீ தொட்ட இடம் எல்லாம்
துலங்கும், துளிர்க்கும்
ஒருசிலர்க்கு மட்டும்
சுட்டுவிடும், நெருப்பாய் பட்டுவிடும்!.

பெரியாரின் பேரன் நீ
அதனால் தான்
எங்கு அடித்தால் எதிரி வீழ்வான்
என இடம் பார்த்து அடிக்கின்றாய்!.

அண்ணாவின் வழித்தோன்றல் நீ!
கொள்கைச் சமரில்
உனக்கு சலிப்பே வருவதில்லை.

கலைஞரின் பேரன் நீ
உன் சமயோசித பேச்சிலும் சரி1,
உரையிலும் சரி!
அடிக்கின்ற அடியிலும் சரி!
உடுக்கின்ற உடையான கருப்பிலும் சரி
நக்கலிலும் சரி, நையாண்டி பேச்சிலும் சரி
சபாஷ்!
நீ முழுவதுமாய்
கலைஞரின் பேரன் தான்!

சமரசமில்லா போராளியே!
படைமுகத்து பெருவீரனே!
நீ சமூகநீதியின் அரண்!
சனாதனத்தின் முரண்!

இயக்கத்தின் வேர்களுக்கு பொற்கிழி.
இளைஞர்கள் படைநடத்த, பயிற்சி பெற
பாசறைக்கூட்டம்.
எத்தனை சிந்தனைகள் உனக்கு
இனம் காக்க! இயக்கம் காக்க!.

கலைஞரின் பேரனே!
தலைவர் ஸ்டாலினின் தவப்புதல்வனே!
விலைபோகா வீரம் நீ!
வீழ்ந்து விடா மானம் நீ
எந்த சுழலிலும், சூழலிலும்
திராவிட இயக்க கொள்கைகளை
விட்டுக்கொடுக்காத விவேகம் நீ

கழகத்தின் கொள்கை கருவூலமே!
இளைஞர்களுக்கு மட்டும் அல்ல
இயக்கத்தின். இனத்தின்
அடுத்த தலைமுறைக்கும் தலைமையேற்க
தகுதியானவன் நீ மட்டும் தான்!

2026 தேர்தல்
ஆட்சிக்கான தேர்தல் மட்டும் அல்ல
நம் இயக்கம் காக்கும் நேர்தல்
நம் இனம் காக்கும் தேர்தல்
நம் மொழி காக்கும் தேர்தல்
நம் அடுத்த சந்ததியைக் காக்கும் தேர்தல்

உதயநிதியே!
எங்கள் இதயநிதியே!
பாசிசத்தின் பகையே!
பகுத்தறிவு படைக்கலனே!
சூல்கொண்ட பகையை.
வேல் கொண்டு வீழ்த்தப்புறப்படு.

விண்ணை முட்ட கொட்டட்டும் போர் முரசு!
நீளட்டும் கூர் வேல்கள் பகையை நோக்கி!
உயர்த்தட்டும் உன் தோள்கள் வாளைஏந்தி!
அமைத்திடுவாய் சக்கர வியூகம்!.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்
உடன்பிறப்புகளே!
அணிவகுப்போம்!.
ஆர்ப்பரிப்போம்!.
வெற்றி கொள்வோம்!



**இராசா அருண்மொழி**
மாவட்ட துணைச் செயலாளர்
விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.
துணைத் தலைவர் - தமிழ்நாடு அரசின்
சீர்மரபினர் நல வாரியம்

### மு. அப்துல்ராஜா தலைமை! துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி

## நெல்லை மேற்கு நகரத்தில் இரத்ததான முகாம்!

### ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்! சு. சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை.டிச.6 .

நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் 49 நபர்கள் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நாளை (07.12.2025)

ஞாயிற்றுக்கிழமை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையில் நடைபெறுகிறது.இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று இரத்ததானத்தை துவக்கி வைக்கிறார்.என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவரது அறிக்கை வருமாறு.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வாழ்த்துக்களுடன் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு கழக துணை பொதுச் செயலாளர் மண்டல தேர்தல் பொறுப்பாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி,கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும் திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு ஆகியோர்களின் ஆலோசனைபடி நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் அறிவுறுத்தலின் படி நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் 49 நபர்கள் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நாளை (07.12.2025) நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி பங்கேற்று துவக்கி வைக்கிறார்.

ஆகவே மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட,கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள்,கழக சொந்தங்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி கழகம் சார்பில் புனித அந்தோணியார் கருணை இல்லத்தில் பகுதிச் செயலாளர் த.ஜீவா தலைமையில், மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கருணை இல்லத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் இரவு உணவை வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் ம.விஜயன், என்.பி.துரை, மு.சேக்மீரான், வி.அகஸ்தீசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.